**OS. 52/2022**

**நாள். 20.04.2023**

**வா.சா. 1 –** சுந்தர்ராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிகாம் படித்துள்ளேன். எனக்கு சொந்த ஊர் கீழக்காவனூர். தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். சென்னையில் 35 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் மற்றும் பைனான்ஸியல் கன்சல்டன்டாக பணிபுரிந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் பிற நிறுவனங்களுக்கு கடன் கொடுப்பேன் என்றால் இல்லை. நான் தனிநபர்களுக்கு கடன் கொடுப்பேனா என்றால் கொடுப்பேன். நான் தனிநபர்களுக்கு கடன் கொடுக்கும்போது சொத்துக்களின்பேரில் கொடுப்பேனா என்றால் கொடுப்பேன். நான் ஒரு சமூக ஆர்வலர். நான் புரட்சி தலைவி பசுமை தமிழகத்தின் நிறுவனர். நான் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ள நபர் என்றால் சரிதான். எனவே சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ள நபர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொந்த ஊர் இராமநாதபுரம் என்றால் சரிதான். பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் ஒரு ஏமாற்றுக்காரர். பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு தனிப்பட்ட முறையில் பழக்கம் இல்லை. தொழில்ரீதியாக மற்றும் எனது அக்கா கணவர் இராஜாங்கம் என்பவர் மூலம் பழக்கம். பிரதிவாதியின் மொபைல் எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. ஆனால் என்னுடைய மொபைல் போனில் உள்ளது. நிரூபணவாக்குமூலத்தில் 3 வது பத்தியில் பிரதிவாதி எனக்கு நன்கு பழக்கமானவர் என்ற அடிப்படையில் என்னிடம் பிரதிவாதி அவரது குடும்ப செலவிற்காக பணம் தேவைப்படுவதாக 01.06.2019 அன்று கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவரது அப்பாவின் மருத்துவ செலவுக்கும், குடும்ப செலவுக்கும் கேட்டார். பிரதிவாதி என்னிடம் எந்த இடத்தில் வைத்து யார் முன்னிலையில் பணம் கேட்டார் என்று என்னுடைய நிரூபணவாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

நான் நிரூபணவாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ மேற்படி விவரங்களை குறிப்பிடவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நிரூபணவாக்குமூலம் 4 வது பத்தியில் நான் பிரதிவாதிக்கு ரூ.23,69,000/– வங்கி மூலமாக கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதி கணக்கில் பணம் செலுத்தியது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என்னுடைய நிரூபணவாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ நான் வழக்கறிஞரிடம் வங்கியில் பணம் செலுத்தியது தொடர்பான ஆவணங்களை கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து 2021 ம் ஆண்டு வரை கொரோனா தொற்று காலம் என்றால் என்னிடம் பிரதிவாதி கொரோனா காலத்திற்கு முன்பே என்னிடம் பணம் வாங்கிவிட்டார். பிரதிவாதி ரூ.23,69,000/–த்தை எப்போது வாங்கினார் என்றால் கொரோனா காலத்திற்கு முன்பே 2019 ல் வாங்கிவிட்டார். ரூ.23,69,000/–த்தை எந்த தேதியில் யார் முன்னிலையில் எவ்வளவு தொகைகளாக பிரதிவாதி வாங்கினார் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. பல தேதிகளில் வங்கி மூலமாகவும், இராஜாங்கம் முன்னிலையிலும் நான் ஊருக்கு வந்தபோது நேரிலும் மேற்படி தொகையை கொடுத்துள்ளேன். எந்த வருடம் என்றால் 2019 ல் கொடுத்தேன். நான் வங்கி மூலமாக பல தேதிகளில் பணம் செலுத்தியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் ரூ.23,69,000/– தொகை இராஜாங்கம் முன்னிலையில் கொடுத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 மேல்அடமான பத்திரத்தில் ரூ.23,69,000/–த்தை பிரதிவாதி தந்தையின் மருத்துவ செலவிற்கு வாங்கியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் ரூ.23,69,000/–த்தை வங்கி மூலமாக பெற்றுக்கொண்டதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.23,69,000/–த்தில் எவ்வளவு தொகை ரொக்கமாக கொடுக்கப்பட்டது, எவ்வளவு தொகை வங்கி மூலம் செலுத்தப்பட்டது என்று வா.சா.ஆ.3 ல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் பல காசோலைகளை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த காசோலைகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கத் தயாராக உள்ளேன். அந்த காசோலைகளின் எண் என்னவென்றால்

காசோலைகளை பார்த்து தான் சொல்ல முடியும். எந்த வங்கி காசோலைகள் என்றால் சில காசோலைகள் State Bank பல காசோலைகள் HDFC வங்கி காசோலைகள், காசோலைகளை பார்த்தால் தான் எந்த எந்த வங்கிகள் என்று சரியாக சொல்ல முடியும். வா.சா.ஆ.3 ல் இராஜாங்கம் மூலமாக பணம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் இராஜாங்கம் மூலமாக பணம் கொடுக்கவில்லை. அவர் முன்னிலையில் தான் பணம் கொடுத்தேன். இராஜாங்கம் முன்னிலையில் பணம் கொடுத்ததாக வா.சா.ஆ.3 ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அடமானப்பத்திரத்தில் அவ்வாறு குறிப்பிடுவது கிடையாது. அடமானப்பத்திரம் எனக்கு வேண்டிய நபர் தயாரித்தார் என்றால் இல்லை. பிரதிவாதிக்கு வேண்டியவர். சாட்சி மீண்டும் அவர் பொது நபர் என்று சொல்கிறார். பொதுவாக பணம் கொடுப்பவர் தான் அவருக்கு வேண்டிய நபரை வைத்து அடமானப்பத்திர பொருண்மைகளை எழுதுவார் என்றால் இல்லை. கொரோனா ஊரடங்கு எப்போது பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கொரோனா ஊரடங்கு 2019 ம் வருடம் ஜனவரி மாதத்திலேயே தொடங்கிவிட்டது என்றால் இல்லை. சாட்சி மீண்டும் தெரியாது என்கிறார். ரூ.23,69,000/– பிரதிவாதியின் எந்த வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டது என்றால் பெரும்பான்மையாக HDFC வங்கியில் செலுத்தினேன். ஆவணங்களை பார்த்தால் தான் எந்த எந்த வங்கியில் செலுத்தினேன் என்று சரியாக சொல்ல முடியும். பெரும்பான்மையாக HDFC வங்கியில் தொகை செலுத்தியது தொடர்பாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ.6 ஒப்புதல் அட்டையை பிரதிவாதி கையொப்பம் செய்து பெறவில்லை என்றால் சரிதான். அவரது வீட்டில் உள்ளவர்கள் வாங்கியுள்ளார்கள். பிரதிவாதியின் வீட்டில் யாரெல்லாம் உள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை. எந்த அடிப்படையில் அவரது வீட்டில் உள்ளவர்கள் வாங்கியிருக்கலாம் என்று சொல்கிறேன் என்றால் பிரதிவாதியின் முகவரிக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது, எனக்கு அதைப்பற்றி தெரியாது. வா.சா.ஆ.5 ல் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதாக இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நான் அனுப்பிய அறிவிப்பு குறித்து தெரியாது என்றாலும் மேற்படி அறிவிப்பை எனக்கு தெரிந்த நபர் மூலம் நானே கையொப்பம் செய்து பெற்றுக்கொள்ள வைத்தேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.